Free Digital Copy From ServeNow

# தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழ்வதைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

*டேனியல் சுந்தர்சிங் மோசஸ்*

ServeNow

Free Digital Copy From ServeNow

**தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழ்வதைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்**

***The Basic Things You Need to Know About Godly Life (Tamil)***

By: Daniel Sundarsingh Moses

Copyright © 2019 by *ServeNow*.
Used by permission.
All rights reserved.

ISBN : 979-8-90086-004-6

All Bible Verses are taken from the Holy Bible (Tamil) 2016 © Copyright by Bible Society of India. Used by Permission. All Rights. Reserved.

Published by *ServeNow*,
1817 Austin Bluffs Parkway #110,
Colorado Springs, CO 80918, USA.

**தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழ்வதைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்**

Free Digital Copy from ServeNow

## அறிமுகம்

இந்த உலகில் வாழ்க்கையானது நாம் தேடும் விஷயங்களினால் ஆளப்படுகிறது. சிலர் சாகசத்தின் வியப்பு மற்றும் உற்சாகத்தால் உந்தித் தள்ளப்படுகிறார்கள். பூமியில் தங்கள் குறுகிய வாழ்நாட்காலத்தில் விலையேறப்பெற்ற ஒன்றைச் சாதிப்பதன் மூலம் அவர்கள் மிகுந்த திருப்தியை அடைவது போல் நினைக்கிறார்கள். மற்றவர்களோ தங்களைச் சுற்றியுள்ள உலகத்தை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் ஒரு எளிய கிராம வாழ்க்கையில் மயங்கிவிடுகிறார்கள். எப்படியென்றால் அவர்கள் வளர்கிறார்கள், திருமணம் செய்துகொள்கிறார்கள், குழந்தைகளைப் பெற்றெடுத்துக்கொள்கிறார்கள், பின்னர் மரிக்கிறார்கள். இருப்பினும், நம்மில் பெரும்பாலானோர் நம் வாழ்க்கையை முழுமையாக வாழ விரும்புகிறோம், மேலும் வரலாற்றில் நம் வாழ்வின் தோற்றச் சுவடுகளை விட்டுச் செல்ல முயல்கிறோம்.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் அவர்களின் துணைவியார் எலினோர் ரூஸ்வெல்ட் என்பவர், "வாழ்க்கையின் நோக்கமானது, அனுபவத்தை அதிகபட்சமாக ருசிப்பதும், புதிய மற்றும் நல்ல அனுபவத்தை அடையும்படி ஆர்வத்துடனும் பயமின்றியும் முயற்சித்து அதை வாழ்வதுமேயாகும்" என்று கூறி இதைச் சரியாகப் புரிந்துகொண்டார்.

நீங்கள் ஒரு பரபரப்பான வாழ்க்கையை வாழ்ந்தால், நீங்கள் இயல்பாகவே ஒரு வெற்றிகரமான நபராக இருப்பீர்கள் என்பது ஒரு பிரபலமான கருத்தாகும். மற்றொரு பிரபலமான கருத்து என்னவென்றால், "நேரம்தான் பணம்", அதாவது நேரத்தின் விலைமதிப்பற்ற பொருள் பணம், சொத்து மற்றும் செல்வத்தை உருவாக்குவதற்கான ஒரு வாய்ப்பாக அது புரிந்துகொள்ளப்படுகிறது. யாருக்குத்தான் அதில் விருப்பமில்லாதிருக்கும்!

இருப்பினும், வேதாகமத்தில் நாம் ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தைக் காண்கிறோம், இயேசு தமது பிரசங்கத்தைக் கேட்போருக்குச் சொன்ன ஒரு உவமையில், மக்களின் பணமும் உடைமைகளும் அவர்களின் வாழ்க்கையை நிர்வகிப்பதாகவும் சமூகத்தில் அவர்களின் அந்தஸ்தை வரையறுப்பதாகவும் தோன்றுகிறது. ஒரு உவமை என்பது பரலோக சத்தியத்தை எடுத்துரைக்கும் பூமிக்குரிய கதையாக இருக்கிறது. இது வண்ணமயமான மற்றும் சர்க்கரை பூசப்பட்ட ஒரு காப்ஸ்யூல் மாத்திரையைப் போன்றது. அதை உட்கொள்ளாவிட்டால் அதன் பலனை உணர முடியாது. அதன் சத்தியத்தை கவனமாகக் கேட்க வேண்டும், போதுமான அளவு தியானிக்க வேண்டும், சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும், வாழ்வில் முழுமையாகப் பொருத்த வேண்டும் மற்றும் ஒருவரின் வாழ்க்கையில் தினமும் அதனைப் பயிற்சி செய்ய வேண்டும்.

Free Digital Copy From ServeNow

## ஒரே ஒரு வாழ்க்கை

இதைத் தொடர்ந்து வரும் கதையை வாசித்த பிறகு, வாழ்க்கையைப் பற்றி நீங்கள் உண்மையில் என்ன நினைக்கிறீர்கள் என்பதை மீண்டும் ஆராய்ந்து பார்க்கலாம். நிச்சயமாக, வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. அது மிகவும் சலிப்படையச் செய்யும், நம்மை வேகமாக இழுத்துச் செல்லும் திறனைக் கொண்டதாகவும் இருக்கும், பின்னர் திடீரென்று புரிந்துகொள்ளவோ அல்லது பிரச்சனைகளைத் தீர்க்கவோ முடியாத மர்மங்களாக அது எழும்பும். வாழ்க்கையைப் பற்றி அளவுகடந்த பகுத்தறிவுடன் சிந்திப்பதையோ அல்லது அதை விதியின் எல்லைக்குள் உட்படுத்துவதையோ நிறுத்திக்கொள்ளுங்கள். இது ஒரு நீண்ட கோடு போன்றது, ஆனாலும் அதற்கு ஒரு முடிவு உண்டு. இது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நம் ஒவ்வொருவருக்கும் தேவனால் வழங்கப்பட்டிருக்கிறது. இறுதியில் நாம் அனைவருமே நம் வாழ்வுக்கான ஒரு கணக்கை ஒப்புவிக்க வேண்டும்.

*... ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.* (எபிரெயர் 9:27-28).

## இதுதான் கதை

*பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார். அல்லாமலும், ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்துவைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்.* (லூக்கா 12:15-21).

Free Digital Copy from ServeNow

## தவறுதலான முன்னுரிமைகள்

வாழ்க்கையில் வெற்றிபெற மிகவும் கடினமாக உழைத்த ஒரு மனிதனை விவரிக்க இயேசு வலுவான பதங்களைப் பயன்படுத்துவது ஆச்சரியமாக இருக்கலாம். அவன் மிகவும் கடினமாக உழைத்தான் என்பது மட்டுமல்லாமல், அவனுக்கு ஒரு தரிசனமும் இருந்தது என்பதை அறிந்துகொள்வது முக்கியம்: அவன் ஒரு திட்டத்தை வகுத்து, இலக்குகளை நிர்ணயித்திருந்தான், அவ்வாறே வெற்றி பெற்றான். அதன் பின்னர் அவன் நிலைத்து நின்று தனது கடின உழைப்பின் பலனை அனுபவித்தான். ஆனாலும் அவன் ஒரு மதிகேடன் என்று கருதப்பட்டான். ஏன்? ஏனென்றால் அவன் தனது முழு வாழ்க்கையையும் தவறுதலான முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தான்.

அவன் ஆவிக்குரிய விஷயங்களை விட உலகப்பொருளுக்கு முன்னுரிமை அளித்தான் (எனது கதிர்களை சேமித்து வைக்க எனக்கு இடமில்லை). அவன் ஆத்துமாவை விட சரீரத்துக்கு முன்னுரிமை அளித்தான் (வாழ்க்கையை இலகுவாக எடுத்துக்கொள்ளுங்கள்; புசியுங்கள், பருகுங்கள், மகிழ்ச்சியாக இருங்கள்). அவன் வாழ்க்கையை வாழ்வதை விட எதிர்காலத்தில் வரும் ஆண்டுகளுக்கு முன்னுரிமை அளித்தான் (*ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான்."*) *"உங்கள் வாழ்க்கையில் ஆண்டுகள் கணக்கிடப்படுவதில்லை. உங்கள் ஆண்டுகளில் வாழ்க்கைதான் முக்கியம்"* என்று பிரபலமான ஒரு நபர் கூறியதைப் போலவே இது இருக்கிறது. இறுதியில் தம் வாழ்வைப் பற்றிக் கணக்கு கேட்பவரான, நமக்கு ஜீவனைக் கொடுத்த தேவனைப் பற்றி நாம் எதுவும் சிந்திக்காமல் வாழ்ந்தால் என்ன ஆகும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

## நியாயத்தீர்ப்பு

லூக்கா 12:21-ல், இயேசு அதை சுருக்கமாகக் கூறி, *"தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்"* என்று கூறினார்.

ஆகையால், இந்த உவமையானது, ஐசுவரியவானாகவும் வெற்றி பெற்றவனாகவும் இருந்தும், தேவனிடத்தில் ஐசுவரியவானாக இல்லாமல் வாழ்ந்த ஒரு நபரைப் பற்றிப் பேசுகிறது. உண்மையில், அவன் தனது வாழ்க்கையில் தேவனைப் பற்றிச் சிந்தித்ததே இல்லை, தேவனுடன் பேசியதும் இல்லை. ஒரு ஜெபமற்ற வாழ்க்கையையும், தேவனில்லாத வாழ்க்கையையும் வாழ்ந்தான்! அவனது வாழ்க்கை

Free Digital Copy From ServeNow

மிகவும் அலுவல் மிகுந்ததாக இருந்தது, அதில் தேவனுக்கு இடமில்லாதிருந்தது. சுவாரஸ்யமாக, அவன் தனது வாழ்நாளில் ஒரே ஒரு முறைதான் தேவன் பேசுவதைக் கேட்டான். *"உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்"* என்பதே அந்த வார்த்தையாகும்.

அதற்காக அவனால் எதுவும் செய்ய முடியாதபடிக்கு மிகவும் காலதாமதமாகிவிட்டது. சில நேரங்களில், வாழ்க்கை என்பது பெறுவதைப் பற்றியது அல்ல, கொடுப்பதைப் பற்றியது என்பதை நாம் மறந்துவிடும் அளவுக்கு, நமது உரிமைகளுக்காக, நாம் தகுதியானவர்கள் என்று நினைக்கும் விஷயங்களுக்காகப் போராடுவதில் மிகவும் மும்முரமாக இருக்கிறோம். பூமியில் நமது காலம் முடிவுக்கு வரும்போது, அதை வாழ்ந்த விதத்திற்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

## தேவபக்தி என்றால் என்ன?

தேவபக்தி என்பது தேவன் மீதான பயபக்தி மட்டுமல்ல, அது பூமியில் உள்ள ஒரு சில பக்தியுள்ள ஜனங்களுக்கு மட்டுமே உரியதும் அல்ல. இது விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு நின்றுவிடும் ஒன்றல்ல; அது இதற்கெல்லாம் அப்பாற்பட்ட ஒன்று எனலாம். இது நம் வாழ்வில் காணும் தேவனைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தேவனுக்கும் மனிதகுலத்திற்கும் இடையிலான உறவைப் பற்றியதாகும். அதாவது, தேவன் மீது நன்கு பயபக்தியுடன் இருத்தல் மற்றும் தேவனுடைய பார்வைக்கு முரணான எதற்கும் ஒரு நபர் மகிழ்ச்சியுடனும் பயமின்றியும் "முடியாது" என்று மறுப்பு தெரிவிக்கும் அளவிற்கு _ அவரது பரிசுத்தத்தன்மை, அவரது ஆளுமை மற்றும் அவரது பிரசன்னத்தை அங்கீகரித்தல் என்பதே இதன் அர்த்தமாகும். தேவன் பரிசுத்தமானவர் என்பதையும், அவரை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்பதையும் இந்த தெய்வபயம் அங்கீகரிக்கிறது. பாவமானது தேவனுடைய பிரசன்னத்தை உணரவும் அனுபவிக்கவும் ஒருவனைத் தகுதியற்ற நபராக ஆகிவிடும் என்பதால், அந்த நபர் பாவம் செய்ய பயப்படுவார் என்பதையும் இது குறிக்கிறது.

*ஜனங்கள் எல்லாரும் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் எக்காளச் சத்தத்தையும் மலை புகைகிறதையும் கண்டார்கள்; அதைக் கண்டு, ஜனங்கள் பின்வாங்கி, தூரத்திலே நின்று, மோசேயை நோக்கி: நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்றார்கள்.*

*மோசே ஜனங்களை நோக்கி; பயப்படாதிருங்கள்; உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், தேவன் எழுந்தருளினார் என்றான்.*

Free Digital Copy From ServeNow

*ஜனங்கள் தூரத்திலே நின்றார்கள்; மோசே, தேவன் இருந்த கார்மேகத்துக்குச் சமீபமாய்ச் சேர்ந்தான்.* (யாத்திராகமம் 20:18-21).

தேவனைப் பற்றிய குறுகிய வெளிப்பாட்டைக் கொண்ட ஜனங்கள் தேவனை எவ்வாறு புரிந்துகொண்டார்கள் என்பதன் அடிப்படையில் நாமும் அடிக்கடி பயப்படுகிறோம். இயேசுவைப் பற்றிப் பேசும்போது, மரிக்கும் தருவாயில் இருந்த ஒரு திருடன் சிலுவையில் மரிக்கும் தருவாயில் இருந்த மற்றொரு திருடனுக்கு, நாம் தேவனுக்கு பயப்பட வேண்டும் என்று விளக்கியது நமக்கு ஆச்சரியமூட்டுகிறது (லூக்கா 23: 39-40). இதிலிருந்து நாம் நிச்சயமாக தேவபயத்தைக் கற்றுக்கொள்ளலாம்.

## தேவன் மீதான அன்பு

ஒருவர் தேவனுடைய வல்லமை மற்றும் பரிசுத்தத்தினிமித்தம் அவருக்குப் பயந்தாலும், அவருடைய பிரசன்னத்தை நெருங்க முடியாவிட்டால் அதனால் என்ன பயன்? பயத்தை அடிப்படையாகக் கொண்ட எந்த உறவும் அர்த்தமுள்ளதாக இருக்காது. அர்த்தமுள்ள உறவுகள் அன்பை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். தேவனிடத்திலும் அப்படியே இருக்க வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால், தேவனுடன் ஒரு துடிப்பான மற்றும் முக்கியமான அன்பின் உறவைக் கொண்டிருப்பதாகும். அவரது வார்த்தைகள், கட்டளைகள் மற்றும் விருப்பங்களுக்கு மகிழ்ச்சியுடன் மற்றும் உணர்வுப்பூர்வமாக "ஆம்" என்று சொல்லத்தக்க உறவுவே அவசியமானது. அப்போதுதான் அந்த உறவு எவ்வகையிலும் ஒருபோதும் பாதிக்கப்படாமல் இருக்கும். தேவனுடனான நமது உறவு மற்ற எல்லா மனித உறவுகளையும் விட முன்னுரிமை பெற்றதாக இருக்க வேண்டும். உண்மையில், தேவன் தம்மைப் பின்பற்றுவதாகக் கூறுபவர்களிடமிருந்து அன்பை விரும்புகிறார் என்று வேதாகமம் கூறுகிறது.

உபாகமம் 6:4-9-ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்: *இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.*

Free Digital Copy From ServeNow

தேவபக்தி மற்றும் பரிசுத்தம் என்ற இரண்டு சொற்களும் சில சமயங்களில் ஒன்றுக்கொன்று மாறி மாறி இடம்பெறக்கூடியதாக இருக்கலாம், ஆனால் பரிசுத்தம் என்பது நமக்குள் வசிக்கும் தேவன் என்றும், தேவபக்தி என்பது நமக்குள் இருக்கும் தேவனுடைய பரிசுத்தத்தின் வெளிப்பாடு என்றும் நான் விசுவாசிக்கிறேன். எளிமையான வார்த்தைகளில் கூறுவதானால், தேவனுடன் தனிப்பட்ட சந்திப்பைப் பெற்று தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழ விரும்பும் ஒருவரால் மட்டுமே தேவபக்தியைக் கடைப்பிடிக்க முடியும். இதன் அர்த்தம் என்னவென்றால், தேவன் உணருவதுபோல் உணர்தல், தேவன் கொண்டிருக்கும் அதே மனப்பான்மையைக் கொண்டிருத்தல், தேவன் விரும்புகிற விஷயங்களில் பிரியமாய் இருத்தல் என்பதாகும். மேலும், தேவன் நேசிப்பதுபோல் நேசிப்பதும், அவர் வெறுப்பதை வெறுப்பதும் ஆகும். இருப்பினும், நாம் இந்த உலகில் வாழ்கின்றபடியால் இது எளிதானது அல்ல. இந்த உலகில் வாழ்வது நமக்குள் ஒரு முரண்பாட்டை உருவாக்குகிறது, ஏனெனில் உலகம் அதற்கென மதிப்புகளையும் தரநிலைகளையும் கொண்டுள்ளது. விலைக்கிரயத்தின் மதிப்பை எண்ணி கிரயம் கொடுக்கத் தேர்ந்தெடுக்கும் ஒருவரால் மட்டுமே தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ முடியும்.

## தேவன் வித்தியாசமானவர்

வெளிப்பாடு இல்லாமல், தேவனை யாரும் அறியவோ புரிந்துகொள்ளவோமுடியாது. இது எந்த மனித முயற்சியினாலும் பெறப்பட்ட அறிவு அல்ல, மாறாக தகுதியற்ற மனிதர்களாகிய நமக்கு தேவன் அளித்த கிருபையின் சுய வெளிப்பாடாகும். அவர் நமக்கு அளித்துள்ள சிறந்த பண்புகளில் ஒன்று, தேவனைப் புரிந்துகொள்ளும் திறன் ஆகும். இது நாம் இருக்கும் விதத்திலிருந்து அவரை வேறுபட்டவராகக் காண நமக்கு உதவுகிறது. ஏசாயா தீர்க்கதரிசி ஒரு தரிசனத்தின் மூலம் பரலோகத்தில் உள்ள தேவனுடைய ஒரு காட்சியைக் காணும் பாக்கியத்தைப் பெற்றார். இருப்பினும், நம்மில் பெரும்பாலானோர் தேவனுடைய ஆளுமையையும் குணநலன்களையும் வேதாகமத்தின் மூலம் மட்டுமே பார்க்க முடியும்.

## பரலோகம் ஒரு பார்வை

ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்: ஏசாயா 6:1-7

*உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன்*

**<u>தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழ்வதைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்</u>**

Free Digital Copy From ServeNow

*இரண்டு செட்டைகளால் தன்தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன்தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து; ஒருவரையொருவர் நோக்கி:*

*சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்.*

*கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது. அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன்.*

*அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்துவந்து, அதினால் என் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான்.*

வேதத்தின் இந்தப் பகுதியில், தேவன் தம்மைப் பரிசுத்தமானவராகவும் தூய்மையானவராகவும் வெளிப்படுத்தினார். அவர் பரலோகத்தில் காணப்படுகிறார், பரலோக ஜீவன்களால் துதிக்கப்படுகிறார், அவர்கள் அவருடைய பிரசன்னத்தில் நின்றாலும், அவரைப் பார்க்கத் துணியமாட்டார்கள், அதே நேரம் தங்களது செட்டைகளால் தங்களை மூடிக்கொண்டு, ஆலயம் முழுவதும் எதிரொலிக்கும்படியான சத்தத்துடன் அவரைக் கூப்பிடுவர். "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்ற தேவதூதர்களின் சத்தம், தேவன் சிருஷ்டிக்கப்பட்ட எந்த ஒரு ஜீவனிலிருந்தும் வேறுபட்டவர் என்பதைக் குறிக்கிறது. ஏசாயா தீர்க்கதரிசிக்கு அந்தத் தரிசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய குணாதிசயமானது, மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றிற்கு நேராக நடத்தி, வலுவான மற்றும் உடனடி பதிலைத் தெரிவிக்க அவரை உந்தித்தள்ளியது. எனவே, அது நம் மனித வாழ்க்கையின் குணத்திலும் நடத்தையிலும் மாற்றத்தைத் தேடுவதற்கான வாய்ப்பை நமக்கு வழங்குகிறது. இது நாம் ஆராதிக்கும் தேவனிடத்தில் ஆரோக்கியமான பயபக்தியையும் வழங்குகிறது. மேலும் இது ஒரு பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதற்கான உற்சாகத்தை நமக்குக் கொடுக்கிறது.

தேவன் யார் என்று நீங்கள் சிந்திப்பீர்களானால், வேதாகமம் உங்களுக்குக் கூறுவதைக் கவனியுங்கள், *"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.* (எபிரெயர் 12:14).

Free Digital Copy From ServeNow

இயேசு தமது மலைப்பிரசங்கத்தில், *"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்"* (மத்தேயு 5:8) என்றும் நமக்குக் கற்பித்தார்.

தேவனுடைய பரிசுத்தத்தையும் தூய்மையையும் காணும்போது நாம் அதற்கு ஏற்ற நடக்கையை கொண்டிருப்பவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய குணத்தை யாராலும் அல்லது எதனாலும் மாசுபடுத்த முடியாது. உண்மையில், தேவனுடைய பரிசுத்தமானது நம்மைச் சுற்றியுள்ள எல்லாவற்றிலும் தேவனுடைய சுபாவத்தைக் காணக்கூடிய வகையில் நம்மை மாற்றும் வல்லமையைக் கொண்டுள்ளது.

## நீங்கள் விசேஷமானவர்களாக இருக்க அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்!

தேவன் வித்தியாசமானவராக இருப்பதைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாகப் பேசுகிறோமோ, அதே போலவே நாமும் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்வதும் முக்கியம்.

## நீங்கள் எத்தகையவர்கள்!

*நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.* (1 பேதுரு 2:9).

தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்களுடைய தனித்துவமான பண்புகளில் ஒன்று, நாம் "பரிசுத்த ஜாதி" என்பதாகும். நாம் வாழும் உலகின் சக்திவாய்ந்த செல்வாக்கால் இந்தத் தனித்துவம் ஒருபோதும் சிதைக்கப்படக்கூடாது. நாம் ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்தால், நமது தனித்துவம் மாசுபட்டு, நம்மைச் சுற்றிப் படையெடுக்கும் செல்வாக்குகளால் சமரசம் செய்யப்படும்.

அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்கு நினைவூட்டுகிறார், உங்களை அழைத்தவர் பரிசுத்தராக இருப்பதுபோல, நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் பரிசுத்தமாக இருங்கள்; ஏனெனில்: *"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்"* (1 பேதுரு 1:15-16) என்று எழுதப்பட்டுள்ளது.

இஸ்ரவேல் தேசம் அதன் ஆவிக்குரிய பயணத்தில் சிறிது முன்னோக்கி சென்றுகொண்டிருந்தபோது, தேவன் தம்முடைய ஜனங்கள் வாழக் கட்டளையிட்ட வாழ்க்கையைப் பற்றி பேதுரு நமக்கு நினைவூட்டிக்

Free Digital Copy From ServeNow

கொண்டிருந்தார். இந்தப் பரிசுத்தக் கட்டளையை மோசேக்குக் கற்பிக்க தேவன் அவரை மலைக்கு வரும்படி அழைத்தார்.

*இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைகொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்.* (யாத்திராகமம் 19:5-6).

## உங்களது பாடுகள்!

விசுவாசத்தின் நிமித்தம் உபத்திரவப்படுத்தப்பட்ட திருச்சபைகளுக்கு பேதுரு இவ்வாறு எழுதினார். தங்கள் விசுவாசத்தை மாத்திரம் பற்றிக்கொள்ளவும், அதை விட்டுவிடாமல் இருக்கவும் அவர்களை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, கிறிஸ்துவில் அவர்களின் அடையாளத்தை அவர்களுக்கு நினைவூட்டுகிறார். அவர்கள் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நம்மை உபத்திரவப் படுத்தும் ஜனங்களுக்கு நாம் தேவனது மகத்துவங்களை அறிவிக்க வேண்டும். எனவே, நீங்கள் கடந்து செல்லும் உபத்திரவத்தின் பாதையில் உண்டாகும் வலியின் மீது அல்ல, உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கத்தின் மீது கவனம் செலுத்துங்கள்.

*பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடையய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார். ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.* (1 பேதுரு 4:12-16).

## உங்கள் ருசி!

*நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், தரையில் ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களைத்*

Free Digital Copy From ServeNow

*தீட்டுப்படுத்தாமல், உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக. நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால். நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக.* (லேவியராகமம் 11:44-45).

ஜனங்கள் புசிக்கும் உணவைக் குறித்து கூட கட்டளையை கொடுத்து, தேவன் தம் ஜனங்களிடமிருந்து தேவபக்தியை எப்படி எதிர்பார்த்தார் என்பதை நாம் பின்னர் காண்போம்!

## உங்கள் உறவுகள்!

*ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: "நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு"* என்றார் (ஆதியாகமம் 17:1).

ஆபிரகாம் சந்தேகிக்கத் தொடங்கி, இறுதியில் தனது வாக்குத்தத்தம் நிறைவேறுவதைக் காண காத்திருக்கக் கூடாமல் தேவனிடத்தில் பொறுமை இழந்தபோது, அவருக்கு வேறொரு ஸ்திரீ மூலம் ஒரு மகன் பிறந்தான். இது தேவனை அதிருப்தி அடையச் செய்தது, தேவன் அவருக்குக் காட்சியளித்து அவர் விசுவாசிக்கும்படி மீண்டும் கோரினார்.

## உங்கள் பணி!

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1 பேதுரு 2:9).

தேவபக்தி என்பது நோக்கமற்றது அல்ல. அது நம்மை தேவனுக்கு மிகவும் பயனுள்ள நபாக ஆக்குகிறது. தேவன் தம்மைச் சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய ஜனங்களைத் தேடுகிறவராய் இருக்கிறபடியால், தேவபக்தியற்ற ஒரு நபர் தகுதியற்ற பிரதிநிதியாகவும் திறனற்ற பேச்சாளரான பிரதிநிதியாகவும் இருப்பான்.

# என்ன ஒரு குழப்பம்! ஓடுவதா அல்லது நிற்பதா?

முன்னர் குறிப்பிட்டபடி, ஒரு கிறிஸ்தவரின் அடையாளம் எப்போதும் தாக்குதலுக்கு உள்ளாகிறது. இது நமது கிறிஸ்தவ நம்பிக்கைகள் மற்றும் பற்றுறுதிகள் மீதான நேரடித் தாக்குதலாக இருக்கலாம் அல்லது அது நமது கட்டமைக்கப்பட்ட சிந்தனை மற்றும் நடத்தை வாழ்க்கை முறைகளில் சிறிய மற்றும் தீங்கற்ற ஊடுருவலாக இருக்கலாம். கொரிந்து திருச்சபைக்கு பவுல் எழுதிய கடிதங்களில்

Free Digital Copy From ServeNow

ஒன்றில், கிறிஸ்தவ அடையாளத்தின் இந்தப் பிரச்சினையை அவர் நேரடியாகவும் வெளிப்படையாகவும் குறிப்பிடுகிறார்.

ஒருவரின் அடையாளத்தைப் பாதுகாக்க ஒரு பாதுகாப்பான சூழலில் ஒளிந்துகொள்வது எளிதான விஷயங்களில் ஒன்றாகும். இந்தக் கருத்து துறவறம் மற்றும் சந்நியாசத்திற்கு வழிவகுத்தது. இயேசு தனது மலைப்பிரசங்கத்தில் நமக்குக் கற்பித்ததைப் பார்ப்போம். நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு 5:13-16).

தேவன் தம்முடைய ஜனங்கள் பூமிக்கு உப்பாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். இயற்கையால் உப்பு என்பது கண்ணுக்குத் தெரியாதது, கவனத்தை ஈர்க்காது, ஆனால் அது அங்கே இருப்பதன் மூலம் அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. எனவே உங்கள் நிலைப்பாட்டில் நின்று பங்களியுங்கள். ஒருவேளை அமைதியாக இருக்கலாம், ஆனால் ஆர்வம் இல்லாமல் இருக்கக்கூடாது. எனவே ஓடி ஒளியாதீர்கள். அமைதியாக செயல்படுங்கள், அதே நேரத்தில், குறிப்பிடத்தக்க அளவு உங்கள் பங்கை ஆற்றுங்கள்.

மற்றவர்கள் உங்களின் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்தில் தேவனைத் துதிக்கும்படி, தம்முடைய ஜனங்கள் ஒளியாக பிரகாசிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் நாமத்தில் செய்யப்படும் நற்செயல்கள் காணக்கூடியதாக மட்டுமல்லாமல், மற்றவர்கள் வாழ்வில் தாக்கத்தை உண்டுபண்ணும் அளவுக்கு வல்லமை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். ஜனங்கள் தேவனைப் புகழ்ந்து கருத்தாய் துதிப்பதற்கு உதவுவதே அதன் குறிக்கோளாக இருக்க வேண்டும். எனவே, உலகத்தின் இருள் மற்றும் அவபக்திக்கு விலகி ஓடும்படி, சோதனைக்கு நாம் அடிபணியக்கூடாது. உங்கள் ஒளியைப் பிரகாசிக்கச் செய்யுங்கள்!

நாம் நிலைத்து நின்று நமது கிறிஸ்தவ சாட்சியின் மூலம் நமது உலகத்திற்கு நாம் பங்களிக்கவில்லை என்றால், நமது தேவபக்தியான வாழ்க்கையானது அர்த்தமற்றதாகப் போய்விடும். நாம் நமது தனித்துவத்தை இழக்காமல் செயலாற்றினால் மட்டுமே நமது தேவபக்தியானது ஒரு குறிக்கோளைக் கொண்டதாக இருக்கும். இயேசுவும் தமது சீஷர்களுக்காக ஜெபித்தார். அவர்கள் இந்த

Free Digital Copy From ServeNow

உலகத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று அவர் ஜெபிக்கவில்லை, மாறாக, அவர்கள் இந்த உலகிலேயே பரிசுத்த வாழ்க்கையை வாழ வேண்டும் என்று ஜெபித்தார்.

*நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.* (யோவான் 17:15-19).

ஒரு பரிசுத்த வாழ்க்கை உலகத்தின் கவனத்தை ஈர்க்கிறது. இது நமது கிறிஸ்தவ சாட்சிக்குத் தேவையான வல்லமையையும் அளிக்கிறது. நமது கிறிஸ்தவ வாழ்க்கையிலும் நடைமுறையிலும் இந்த தூய்மை காணப்படவில்லையென்றால், நமது கிறிஸ்தவ சாட்சியில் நாம் பெலனற்றவர்களாகிவிடுவோம்.

ஓடிப்போவதன் மூலம் நாம் பயனற்றவர்களாகிவிடுகிறோம், தூய்மை இல்லாமல் வாழ்வதன் மூலம் நாம் பெலனற்றவர்களாகிவிடுகிறோம். இதை உங்கள் ஜெபமாக மாற்றிக்கொள்ளுங்கள். "ஆண்டவரே! நான் உமக்கு மகிமையைக் கொண்டுவர இயலும்படிக்கு, என் கிறிஸ்தவ சாட்சியில் நான் பயனுள்ள நபராகவும் வல்லமை வாய்ந்த நபராகவும் இருக்க எனக்கு உதவுவீராக!"

*அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?*

*நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே, ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.* (2 கொரிந்தியர் 6:14-18).

Free Digital Copy From ServeNow

ஆ! இது கடினமான வார்த்தை: “நுகத்தில் பிணைக்கப்படுதல்,” “சம்பந்தம்,” “ஐக்கியம்,” “இசைவு,” “பங்கு.” இந்த வார்த்தைகளானது, சில கிறிஸ்தவர்கள் ஏற்கனவே தங்கள் கிறிஸ்தவ வாழ்வின் தனித்துவத்தை இழந்துவிட்டார்கள் அல்லது கிட்டத்தட்ட இழந்துவிட்டார்கள் என்பதைக் குறிக்கிறது. நமது விசுவாசத்தை இழப்பதற்கு முன்பு நமது அடையாளத்தைப் பாதுகாக்க நாம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எகிப்தில் 400 ஆண்டுகளுக்கும் மேலாக அடிமைத்தனத்தில் இருந்த ஜனங்களை விடுவித்து அழைத்துச் செல்ல, மோசே என்ற மனிதனை தேவன் எழுப்பும் வரை, அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்து தமது ஜனங்களை மீட்பதற்கு முயற்சி எடுத்த தேவனிடத்தில் தேவ ஜனங்கள் காட்ட வேண்டிய விசுவாசம் மிக முக்கியமானதாகும்.

## சமரசம் செய்யக் கூடாது!

*அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன்; அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்று சொல் என்றார்* (யாத்திராகமம் 4:22-23).

இதுதான் முக்கிய விஷயம் - ஆராதனை செய்ய வேண்டும். ஒரு ஆராதனையாளர் விடுதலை பெற்ற ஒரு நபராக இருக்க வேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே தேவனுக்கு ஊழியம் செய்ய முடியும். அந்த நபர் தேவனுடைய தெய்வீக கிரியை மூலம் விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும். நாம் ஆராதிப்பவரான இயேசுவை சர்வவல்லமையுள்ள ராஜாவாகப் பார்ப்பதற்கு முன்பு, அவர் நம் இரட்சகராக இருக்க வேண்டும். ஆராதிப்பவர்கள் ஒருமனதுடன் கவனம் செலுத்த வேண்டும். அவர் மீதான அவர்களது முழுமையான விசுவாசத்தை எதுவும் அல்லது யாரும் தொந்தரவு செய்யவோ அல்லது அழிக்கவோ அவர்களால் இடங்கொடுக்க முடியாது.

நாங்கள் திருச்சபையில் அநேகருக்கு முன் நின்றபோது, சாட்சியாக இருந்த அவர்கள் முன், நான் செய்த எனது திருமண உறுதிமொழிகளை நினைவுகூருகிறேன். நான், “மற்ற அனைவரையும் கைவிட்டு, இந்தப் பெண்ணை என் மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன்” என்று சொன்னேன். ஒருவர் மற்றொருவருக்கிடையே செலுத்தும் கவனம் என்பது திருமணத்தில் பலத்தை அளிக்கிறது. மற்ற அனைத்தையும் திருமண உறவுக்கு அச்சுறுத்தலாகக் கருத வேண்டும். எனவே, தேவபக்தி என்பது மற்ற தெய்வங்களுக்கு “முடியாது” என்று மறுப்பு தெரிவிப்பதில் இருக்கிறது.

Free Digital Copy From ServeNow

புதிய ஏற்பாட்டில், இயேசு விசுவாசத்தைப் பற்றிக் கற்பித்தார். *இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.* (மத்தேயு 6:24).

## ஏவப்படுங்கள்!

தேவன் தனித்துவமானவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்; அவர் பரிசுத்தமானவர், அவருடைய குணத்தின் தரத்தில் அவருடைய சிருஷ்டிப்புகள் எல்லாவற்றிலிருந்தும் தனித்து நிற்கிறார். அவர் எதனாலும் அல்லது யாராலும் கறைபடுத்தப்படவில்லை. ஆனால் நான் எப்படி இருக்கிறேன்? நான் வாழ்கிற இதே உலகில் என்னுடன் வாழும் ஜனங்கள் முன்மாதிரியாக இருப்பதை என்னால் பார்க்க முடிகிறதா? பரிசுத்த வாழ்க்கை வாழ்வது சாத்தியமா? ஆம்! வேதாகமத்தில் உள்ள ஜனங்களிடமிருந்து ஒருசில உதாரணங்களை நான் உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன்.

தேவன் மனுஷனையும் ஸ்திரீயையும் சிருஷ்டித்து, ஏதேன் தோட்டத்தில் வைத்தபோது,அவர்கள் தேவனுடன் ஐக்கியத்தை அனுபவித்தனர். அவர்கள் தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றி அவற்றிற்குக் கீழ்ப்படிந்ததால் பயமின்றி தேவனுடைய சமூகத்தில் அவர்களின் நன்மைக்காக வாழ்ந்தார்கள். தேவனுக்குக் கீழ்ப்படியாமல் அவருடைய ஞானத்தையும் நோக்கத்தையும் புறக்கணித்து, விலக்கப்பட்ட கனியைச் சாப்பிட்டபோதுதான் அவர்களின் வரலாறும் தலைவிதியும் ஆபத்துக்குள்ளானது.

வரலாறு முழுவதும் ஜனங்கள் தேவனைப் பிரியப்படுத்தவும், அவருடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வாழவும் போராடியுள்ளனர். பெரும்பாலான ஜனங்கள் அப்படி இருந்தாலும், தேவபக்தியுள்ள வாழ்க்கையை நாம் பின்பற்றும்படி நம்மைத் தட்டி எழுப்புவதற்கு முன் மாதிரியாக சிலர் விதிவிலக்கானவர்களாக தனித்து நிற்கிறார்கள்.

## ஆபேல்

பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்; ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளின் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார். (ஆதியாகமம் 4:2-4).

Free Digital Copy from ServeNow

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிறந்த ஆபேல், ஆராதனை செய்ததால் தேவனுடைய தயவைப் பெற்ற ஒருவனாக மாறினான். அவனுடைய பலிகள் ஏன் தயவைப் பெற்றான் என்பதை நமக்குச் சொல்கின்றன. அவன் தன்னிடம் இருந்தவற்றில் சிறந்ததைக் கொடுத்தான். இரத்தத்தால் ஆன ஒரு பலியைச் செலுத்தினான். ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்து அதன் விளைவுகளை அனுபவித்து வாழ்ந்த தனது தகப்பன் ஆதாமிடமிருந்து அதன் முக்கியத்துவத்தை அவன் புரிந்துகொண்டிருக்க வேண்டும். முதற்பிறந்த ஜீவன், ஆட்டுக்குட்டி, காணிக்கை மற்றும் இரத்தம் ஆகியவற்றின் வல்லமை வாய்ந்த கலவையுடன் அவனது பலிகளும் சேர்ந்து தேவனுடைய தயவை அவனது வாழ்க்கையில் பெற்றுக்கொள்ள உதவியது. தேவபக்தி என்பது தேவனுடைய இதயத்தைக் கவர்ந்துகொள்ளும் செயலைச் செய்வதாகும். ஆபேல் நிச்சயமாக அதைப் பெற்றுக்கொண்டான். நாமும் அப்படிச் செய்யலாமே!

## ஏனோக்கு

*ஏனோக்கு அறுபத்தைந்து வயதானபோது, மெத்தூசலாவைப் பெற்றான். ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்ற பின், முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான். ஏனோக்குடைய நாளெல்லாம் முந்நூற்று அறுபத்தைந்து வருஷம். ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்.* (ஆதியாகமம் 5:21-24).

ஏனோக்கு தேவனைக் குறித்து பல கேள்விகளுடன் இருந்த ஒரு மனிதர் என்று நான் நம்புகிறேன். ஆதாம் ஏன் கீழ்ப்படியாமல் போவதைத் தேர்ந்தெடுத்தார், இதனால்தானே தேவனுடனான ஐக்கியம் மற்றும் மகிழ்ச்சியை இழந்தார் என்று அவர் யோசித்திருக்க வேண்டும். (அவர் ஒரு திருமணமான மனிதராக இருந்தபோதிலும், திருமண வாழ்க்கை தேவனைத் தேடுவதைத் தடுக்க ஒருபோதும் அனுமதிக்கவில்லை.) (இது எவ்வாறு இந்த விஷயத்திற்கு பொருந்துகிறது என்று தெரியவில்லை - பல பகுதிகளில் ஒரு பகுதியை மட்டும் ஏன் விவரிக்க வேண்டும்?) முந்நூறு ஆண்டுகளாக அவர் தேவனுடன் சஞ்சரித்தார். பூமியில் ஜனங்கள் வாழ்ந்து மரித்தபோது, ஏனோக்கு தன் வாழ்க்கையில் மிகப்பெரிய ஆர்வமுள்ள ஒரு வாழ்வை வாழ்வதையே அவர் தேர்ந்தெடுத்தார், தேவனை உண்மையாகப் பின்தொடர வேண்டும் எனவும் தீர்மானித்தார். அவரது ஆண்டுகள் 365 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளன, அதில் 300 ஆண்டுகள் தேவனுடனான தனது நெருங்கிய உறவை அனுபவித்த ஆண்டுகளாகும் என்று குறிப்பிடப்படுகின்றன. ஒருவர் இவ்வாறு சுட்டிக்காட்டியதுபோல், தேவன் அவரிடம், *"ஏனோக்கு, நான் இறங்கி வந்து இதுவரை உன்னுடன் சிறந்த ஐக்கியத்தை அனுபவித்திருக்கிறேன். ஒரு*

Free Digital Copy From ServeNow

*மாற்றத்திற்காக நீ ஏன் என் வீட்டிற்கு வரக்கூடாது?"* என்று கூறியிருக்கலாம்.

ஏனோக்கு நிச்சயமாக இந்த அழைப்பை நிராகரித்திருக்க மாட்டார். தேவனால் மிகவும் கவர்ந்திழுக்கப்பட்ட அவர் வீடு திரும்ப மறந்திருக்கலாம். அவர் ஏற்கனவே வேறொரு வீட்டில் வந்து சேர்ந்துவிட்டார்! தேவபக்தி தேவனுடைய கவனத்தை ஈர்க்கிறது. நீங்கள் அவரை உணரும்போது, வாழ்க்கையில் உங்கள் மிகப்பெரிய நாட்டத்தை உண்மையிலேயே கண்டுபிடிக்கிறீர்கள். வேறு எதுவும் உங்களுக்கு முக்கியமாகத் தோன்றாது.

## நோவா

*மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.* (ஆதியாகமம் 6:5-9).

உலகம் பாவச் சுழலில் சிக்கியிருந்தபோது, தேவன் பரிசுத்தமாக இருந்ததால் உலகத்தை நியாயந்தீர்க்க முடிவு செய்தார். ஆனாலும், பாவம் நிறைந்த உலகில் நோவா என்ற நீதிமானைக் கண்டார். பாவ உலகில் நீதியுள்ள வாழ்க்கை வாழ்வது சாத்தியம் என்பதை நமக்கு நாமே நினைவூட்டிக்கொள்ள வேண்டும். நீதியின் நிமித்தம் இப்படிப்பட்ட நபர்கள் மிகவும் அரிதானவர்களாகவே இருக்கின்றனர் என்பதை நாம் உணர வேண்டும். மேலும், நாம் மறந்துவிடாதிருந்தால், ஒரு நீதியான வாழ்க்கைக்கு அதன் விசேஷித்த பலன்கள் உள்ளன என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியும். கொந்தளிக்கும் வெள்ளங்கள் தேவன் சிருஷ்டித்த ஒவ்வொரு உயிரினத்தையும் சூழ்ந்துகொண்டபோதிலும், நோவாவையும் அவரது குடும்பத்தினரையும் தேவன் காப்பாற்றியது மட்டுமல்லாமல், அவரது

Free Digital Copy From ServeNow

முழு குடும்பமும் வெள்ளத்திலிருந்து தப்பிக்க ஒரு இரட்சிப்பின் திட்டத்தையும் வடிவமைத்தார். வரலாற்றில் தேவன் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதினார். தேவபக்தி அவர்களின் உயிரைக் காப்பாற்றியது மட்டுமல்லாமல், அவர்களுக்கு ஒரு புதிய தொடக்கத்தையும் கொடுத்தது. ஒரு நாள் தேவன் நமது பாவ உலகில் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிலிருந்து நீதிமான்களை இரட்சிப்பார். தேவபக்தியுடன் இருப்பது விலையேறப்பெற்றது.

## ஆபிரகாம்

*பின்பு அந்தப் புருஷர் எழுந்து அவ்விடம் விட்டு, சோதோமை நோக்கிப் போனார்கள்; ஆபிரகாமும் அவர்களோடே கூடப்போய் வழிவிட்டனுப்பினான். அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும், நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்.* (ஆதியாகமம் 18:16-19)

தேவன் ஆபிரகாமை அழைத்து, அவருடைய வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை அளிப்பதாக வாக்குப்பண்ணினார். ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார், இதன் விளைவாக தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார். பின்னர், சாராள் மூலம் தேவன் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்காக ஆபிரகாம் பொறுமையாகக் காத்திருக்கவில்லை, மாறாக, ஆகார் என்ற பெண்ணிடமிருந்து ஒரு மகனைப் பெற்றான். தேவனுக்கு முன்பாக நடந்து பரிபூரணமாக இருக்கும்படி கட்டளையிட்ட தேவனை இச்செயல் அதிருப்தி அடையச் செய்தது.

ஆதியாகமம் 18ஆம் அத்தியாயத்தில் கர்த்தர் ஆபிரகாமைச் சந்தித்தபோது, அவர் தமது வருகையின் நோக்கத்தை ஆபிரகாமிடம் சொல்ல விரும்பினார். ஆபிரகாம் தெய்வபக்தி உள்ள வாழ்க்கை வாழ்வார் என்பதையும், அவருடைய பிள்ளைகளையும் அவருடைய வீட்டாரையும் கர்த்தருடைய வழியைக் கைக்கொள்ளும்படி வழிநடத்துவார் என்பதையும் தேவன் அறிந்திருந்தார்.

Free Digital Copy From ServeNow



தேவபக்தி என்பது தேவனைப் பிரியப்படுத்தும் ஒரு தனிப்பட்ட நற்பண்பு மட்டுமல்ல, முழு குடும்பத்திற்கும் வீட்டாருக்கும் தெய்வபக்தியுள்ள வாழ்க்கை முறையை கொடுத்து நடத்துவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகும். தேவன் தமது இருதயத்தில் உள்ளவைகளை தமது ஜனங்களுடன் பகிர்ந்துகொள்வதன் மூலம் இதற்கு வெகுமதி அளிக்கிறார். நீங்கள் தேவபக்தியுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்து, உங்கள் குடும்பத்தை உங்கள் வாழ்க்கையை நடத்தும் அதே விதிமுறைகளுடன் வழிநடத்த விரும்பினால், உங்கள் இதயம் தேவனுடைய இருதயத்தில் உள்ளவற்றைப் பெறும்படி திறக்கிறது. தேவன் இதை ஒரு நோக்கத்திற்காகச் செய்கிறார். சோதோம் மற்றும் கொமோரா நகரங்களை அவர்களின் பாவங்கள் நிமித்தம் நியாயத்தீர்ப்பு செய்யும் நோக்கத்தை தேவன் வெளிப்படுத்தியபோது, அவர்களுக்காகப் பரிந்துபேசும் இரக்கத்தை அவர் ஆபிரகாமிடம் கண்டார்.

## மோசே

மோசேயின் வாழ்க்கையானது மிகவும் அற்புதமான ஒன்றாகும். எகிப்தில் அடிமைகளாக இருந்த பெற்றோருக்குப் பிறந்த அவர், இளவரசராக உயர்ந்தார். ஒரு சக எபிரேய அடிமை ஒரு வேலைக்காரனால் கொடூரமாக நடத்தப்பட்டதைக் கண்டபோது, அவர் திடீரென கோபத்தில் எகிப்தியனைக் கொன்றுவிட்டார். இந்த ஒரு காரியத்தால், அவரது தலைவிதி மாறிவிட்டது. இப்போது அவர் எகிப்தின் ராஜாவான பார்வோனிடமிருந்து மரண தண்டனைக்குத் தப்பி ஓடியவராகக் காணப்பட்டார். வனாந்தரத்திற்கு ஓடிப்போய், மோசே அடுத்த 40 ஆண்டுகளுக்கு ஒரு மேய்ப்பனாக மாறுகிறார். அவரது வாழ்க்கை சாதாரணமான ஒன்றாக மாறிவிட்டது. அவர் தனது வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது அவருக்கு நம்பிக்கை வைத்து எதிர்நோக்க எதுவும் இல்லை, நம்பிக்கை இல்லை, மாறாக வருத்தம் மட்டுமே எஞ்சி இருந்தது. பின்னர் ஒரு நாள் பற்றியெரியும் முட்செடிக்கு முன் அவர் நின்றுகொண்டிருந்தபோது தேவனைச் சந்தித்தார்.

*மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான். அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி, தேவபர்வதமாகிய ஓரேப் மட்டும் வந்தான். அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான்; முட்செடி*

Free Digital Copy From ServeNow

*அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது. அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்துபோகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதக்காட்சியைப் பார்ப்பேன் என்றான்.*

*அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான்.*

*அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச்சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். பின்னும் அவர்: நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். மோசே தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக்கொண்டான்.* (யாத்திராகமம் 3:1-6).

பரிசுத்த தேவனுடனான இந்த சந்திப்பு ஒரு ஆரம்பம் மட்டுமே. அப்போதிருந்து மோசே தேவனுடைய மிகப்பெரிய வெளிப்பாடுகளை அனுபவித்தார். ஒரு நாள் அவர் ஒரு மலையில் தேவனுக்கு முன்பாக நின்று, தனது ஜனங்கள் ஒரே தேசத்தாராக இருந்து தேவனைப் பின்பற்ற உதவும் கட்டளைகளை தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டார். வேதாகமத்தைப் பொறுத்தவரையில், வாழ்க்கையில் தேவபக்தி என்பது சாந்தம் மற்றும் தேவனுக்கு உண்மையாக இருத்தலில் வெளிப்படுவதாய் இருக்கிறது. அது சிறிய விஷயமாக இருந்தபோதிலும், தேவன் தாமே நமக்கு உதவியாக இருப்பார்.

*எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியிருந்தபடியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி: கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரே, எங்களைகொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்.*

*(மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்.) சடுதியிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் நோக்கி: நீங்கள் மூன்று பேரும் ஆசரிப்புக்கூடாரத்துக்குப் புறப்பட்டு வாருங்கள் என்றார்; மூன்றுபேரும் போனார்கள்.*

Free Digital Copy From ServeNow

*கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார்; அவர்கள் இருவரும் போனார்கள். அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன என்றார்.*

*கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது; அவர் போய்விட்டார். மேகம் கூடாரத்தை விட்டு நீங்கிப்போயிற்று; மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற குஷ்டரோகியானாள்; ஆரோன் மிரியாமைப் பார்த்தபோது, அவள் குஷ்டரோகியாயிருக்கக் கண்டான்.* (எண்ணாகமம் 12:1-10).

தேவனுடைய ஊழியரை அலட்சியமாக நடத்துவது எவருக்கும் ஆபத்தானது. மிரியாம் கடினமான வழியில் பாடத்தைக் கற்றுக்கொண்டாள். இந்தப் பத்தியில், மோசேயின் உத்தமத்தை அறிவிக்க தேவன் தலையிட்டார். விசுவாசம் என்பது தேவனுடனான ஒருவரின் உறவில் நிலையாக இருப்பது என்று புரிந்துகொள்ளப்படுகிறது. இது நீண்ட காலமாக தெய்வபக்தியை காத்துக்கொள்வதாகும். இது ஒரு வாழ்க்கை முறையாக இருக்கிறது. உபாகமம் புத்தகமானது மோசேயின் அற்புதமான வாழ்க்கையைப் பற்றிய விளக்கத்துடன் முடிகிறது.

*மோசே எகிப்துதேசத்திலே பார்வோனுக்கும், அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும், அவனுடைய தேசம் அனைத்திற்கும் செய்யும்படி கர்த்தர் அவனை அனுப்பிச் செய்வித்த சகல அடையாளங்களையும் அற்புதங்களையும், அவன் இஸ்ரவேலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாய்ச் செய்த சகல வல்லமையான கிரியைகளையும், மகா பயங்கரமான செய்கைகளையும் பார்த்தால், கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல, ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும்.* (உபாகமம் 34:10-12).

மோசேயின் வாழ்க்கை இரண்டு வழிகளில் விதிவிலக்கானது. அவர் தேவனுடைய அற்புதமான, மகத்தான மற்றும் தெய்வீக பிரசன்னத்தில்

Free Digital Copy From ServeNow

நின்றார். அவர் தேவனுடன் ஒரு நெருக்கமான உறவை அனுபவித்தவராய் இருந்தார். தேவனுடைய அற்புதமான, மகத்துவமான மற்றும் தெய்வீக வல்லமையையும் அவர் வெளிப்படுத்தினார். பார்வோனுக்கும் அவருடைய சொந்த ஜனங்களுக்கும் முன்பாக தமது மகத்தான வல்லமையை வெளிப்படுத்த தேவன் அவரை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். உண்மையிலேயே மோசேயின் வாழ்க்கை ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையாக இருந்தது.

## யோபு

வேதாகமத்தின் ஆரம்பகால புத்தகங்களில் ஒன்று யோபு என்ற மனிதனின் வாழ்க்கையை அறிவிக்கிறது. யோபு பூமியில் மிகவும் விதிவிலக்கான வாழ்க்கையை வாழ்ந்ததால் அது பரலோகத்தின் கவனத்தைப் ஈர்த்தது. பரலோகத்தில் உள்ள தமது தேவதூதர்களுக்கு முன்பாக தேவன் அவரைப் பற்றி பெருமையாகப் பேசும் அளவுக்கு அவர் தனது விதிவிலக்கான வாழ்க்கையால் தேவனைப் பெருமிதப்படுத்தினார். யோபு அப்படி என்னதான் செய்தார்?

*கர்த்தர் சாத்தானை நோக்கி: என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார்* (யோபு 1:8) .

யோபு கறையற்ற வாழ்க்கையை வாழ்ந்தார், தேவனுக்கு முன்பாக சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அவர் தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகினார். தேவபக்தி என்பது தேவனுக்குப் பயப்படுவது மட்டுமல்ல, தீமையை விட்டு விலகுவதும் ஆகும். தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ ஆரோக்கியமான சமநிலையைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியமாகும்.

## யோசேப்பு

யோசேப்பு அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார். அவர் ஒரு அடிமையாக விற்கப்பட்டு, சுதந்திரத்தை இழந்தார், ஆனால் தேவன் மீதான அவரது விசுவாசத்தை யாரும் திருட அவர் அனுமதிக்கவில்லை. அவரது மாற்றமடைந்த சூழ்நிலைகளின் மத்தியில் அவரை ஆசீர்வதித்து, தேவன் அவரைக் கௌரவித்தார். நல்ல விஷயங்கள் நடக்கத் தொடங்கியபோது,அவர் ஒரு ஸ்திரீயால்

Free Digital Copy From ServeNow

சோதிக்கப்பட்டார். அவள் தனக்கு நேராக வருவதை யோசேப்பு நிராகரித்து, தனது பொறுப்புகள், தனது எல்லைகள் மற்றும் தனது நம்பிக்கைகளை அவளுக்கு நினைவூட்டினார். அந்தப் புதிய தேசத்தில், நேர்மறையான ஆவிக்குரிய சூழல் இல்லாமல், குடும்ப தொடர்பு இல்லாமல், தனது வாழ்க்கையை மேற்பார்வையிட யாரும் இல்லாமல் அவர் தனியாக இருந்தபோதிலும், தேவன் தன்னைக் கண்காணித்து வருவதாக அவர் நம்பினார். யோசேப்பைப் பொறுத்தவரை, விபச்சார பாவம் தேவனுடைய பார்வையில் ஒரு பொல்லாத காரியமாக இருந்தது. தேவன் ஒருவர் தவிர வேறு யாரும் பார்க்காதபோதிலும், அவர் தனது தேவபக்தியைக் கடைப்பிடித்தார். அவர் தனது நிலைப்பாட்டிற்கு ஒரு விலையைச் செலுத்தினார், அதன் விளைவாக சிறைத்தண்டனையை எதிர்கொண்டார். சிறைச்சாலையின் எல்லைக்குள் அவர் விடப்பட்டார், மறக்கப்பட்டார், கைவிடப்பட்டார், ஆனால் தேவன் அவரை மறக்கவில்லை.

யோசேப்பின் உண்மைத்தன்மைக்கும் தேவ பக்திக்கும் அவர் பலனை அளித்தார். அவரது தேவபக்தியானது, எகிப்தின் ராஜாவான பார்வோனுக்கு அடுத்தபடியாக இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கும்படியான பதவிக்கு நேராக அவரை உயர்த்தியது. தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ்பவர்கள் ஒரு விலைக்கிரயத்தை செலுத்துவது மட்டுமின்றி, அவர்கள் பெறும்படியான ஒரு ஆசீர்வாதமும் உண்டு, அதுதான் அவர்கள் அனுபவித்த துன்பங்களை விட மிகப் பெரிய ஆசீர்வாதம்.

## எஸ்தர்

தேவனுடைய தெய்வீக ஏற்பாட்டின் மூலம் பெர்சியாவிலிருந்த யூதர்கள் எவ்வாறு அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டனர் என்பதை எஸ்தரின் கதை விவரிக்கிறது. இஸ்ரவேலருக்கும் அமலேக்கியருக்கும் இடையே தொடர்ச்சியான ஒரு சண்டை இருந்துவந்தது, மேலும் ராஜாவின் ஆலோசகனாகிய ஆமானின் கட்டளையானது இஸ்ரவேலர்களை அழிக்க எடுத்த ஒரு மிகப்பெரிய கடைசி முயற்சியாகும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுடைய எதிர்கால வாழ்வு, இறுதியில் மீட்பரான மேசியா தோன்றுதல் ஆகியவை யூதர்களை அழிக்க எத்தனித்த ஆமானின் ஆணையால் ஆபத்துக்குள்ளான கதையின் முடிவைப் போன்றதாக இருக்கும்.

தேவனைப் பற்றிய வெளிப்படையான குறிப்பு எதுவும் இல்லாவிட்டாலும், தற்செயலான நிகழ்வுகள் என்று நாம்

Free Digital Copy From ServeNow

புரிந்துகொள்ளும் வகையில் தேவன் தமது செயல்பாடுகளை திட்டமிடுபவராகக் காணப்படுகிறார். ஒரு ராஜாவின் விருப்பத்தை நிராகரிக்கும்படி ராணி வஸ்தி செய்த மீறல் அந்த ராஜாவுக்கு ஒரு "பொருத்தமான" மனைவியைத் தேட வழிவகுத்தது. நாடு தழுவிய முயற்சி எஸ்தரை ஒரு தகுதியுள்ள நபராக மாற்றியது. யூதர்களை அழிப்பதற்கான ஒரு சதி கண்டுபிடிக்கப்பட்டது, மேலும் எஸ்தர் தனது ஜனங்களைக் காப்பாற்றும் ஒரு கடினமான தேர்வை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்தாள். அவள் மூன்று நாட்களுக்கு தேவனிடத்தில் ஜெபம் மற்றும் வேண்டுதல் செய்ய யூத ஜனங்களுக்கு அழைப்பு விடுத்தாள், அவளுடைய சிறிய தகப்பனாகிய மொர்தெகாயின் ஆலோசனையின்படி செயல்பட்டாள், ராஜாவை சந்திக்கத் துணிந்தாள், அவருடைய தயவைப் பெற்றாள், மேலும் ஏற்பட இருந்த இனப்படுகொலையைத் தடுத்துவிட்டாள். எஸ்தர் சரியான தேர்வு செய்ததால் இவை அனைத்தும் சாத்தியமானது.

*"நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்?"* என்ற மொர்தெகாயின் கேள்வி, தேவன் நமக்கு வழங்கிய சலுகைகள் கீழ்ப்படிதலுடன் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பையும் உள்ளடக்கியிருக்கிறது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. இந்த விருப்பத்தேர்வுகள் சில சமயங்களில் நம் உயிரையே இழக்கும் அளவுக்கு மிகப்பெரிய தியாகங்களைச் செய்யவைக்கின்றன. எஸ்தரின் தைரியமும் விசுவாசமும் தேவனுடைய விசேஷித்த தயவை பெற உதவின. எஸ்தரின் கதை, சாதாரண ஜனங்களைப் பயன்படுத்தி தனக்காக அசாதாரணமான காரியங்களைச் செய்வதில் உள்ள தேவனுடைய விருப்பத்தேர்வை சித்தரிக்கிறது.

## ரூத்

ரூத்தின் கதையை, அவளுடைய மோவாபிய வம்சாவளியின் இருண்ட நாட்களின் பின்னணியிலும், அதைத் தொடர்ந்து இஸ்ரவேல் சமூகத்துடனான விரோதம் நிறைந்த மற்றும் ஆபத்தான தொடர்புகளின் பின்னணியிலும் காட்சிப்படுத்தலாம். ரூத்தின் பிறப்பு லோத்து மற்றும் அவரது மகள்களின் முறையற்ற உறவிலிருந்து வந்தது (ஆதியாகமம் 19:30-39); எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் புறப்பட்டபோது, மோவாபியர்கள் அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர் (எண்ணாகமம் 22-24); இஸ்ரவேலர் சமூகத்தை அவர்கள் மயக்கினர் (எண்ணாகமம் 25:1-9); இஸ்ரவேலர் மோவாபியரை கர்த்தருடைய சபையிலிருந்து விலக்கி வைத்தனர் (உபாகமம் 23:3-6) மற்றும் எக்லோன் ராஜா

Free Digital Copy From ServeNow

இஸ்ரவேலர்களை ஒடுக்கினான் (நியாயாதிபதிகள் 3:15-30). எனவே, ரூத் ஒரு சேறு நிறைந்த குளத்தில் மலரும் ஒரு அழகான தாமரையாகத் தனித்து நிற்கிறாள்.

தேவனுடைய ராஜரீகத்தை வெளிப்படுத்தும் அவளது பெயர் சூட்டப்பட்ட இந்தப் புத்தகத்தில், மோவாபியப் பெண்ணான ரூத், ஒரு இஸ்ரவேல் குடும்பத்தின் மீது வைத்த முழுமையான விசுவாசத்தையும், ஒரு நம்பிக்கையற்ற சூழலில் வாழ்ந்த மாமியார் மீதான தனது முழு இணக்கத்தையும் வெளிப்படுத்துகிறாள், அது அவளை இஸ்ரவேலின் உண்மையான மகள் என்றும் மற்றும் தாவீதின் தகுதியான மூதாதையர் என்றும் அழைக்கப்படத் தகுதியானவள் என்பதை சுட்டிக்காட்டுகிறது. தேவனுடைய மகத்தான திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பது, இரத்தத்தாலோ அல்லது பிறப்பாலோ அல்லது இனத்தாலோ உண்டாவது அல்ல, மாறாக விசுவாசத்தை வெளிப்படுத்தும் எளிய செயலாலும், தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றவாறு நடக்கும் ஒருவரின் வாழ்க்கையாலும் மட்டுமே உண்டாகும் என்பதை அவள் எடுத்துக்காட்டுகிறாள். தாவீதின் வம்சாவளியில் அவள் பெற்ற இடம், அனைத்து நாடுகளும் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படும் என்பதை தேவனுடைய மீட்பின் வரலாறு காட்டுகிறது. அவளுடைய தெய்வபக்தியை வெளிப்படுத்துவதற்கான தேர்வு எல்லா மாற்றத்தையும் ஏற்படுத்தியது.

தேவ பக்தியை வெளிப்படுத்தும் விருப்பத்தேர்வுகள் நீண்ட காலத்திற்கு நல்ல பலன்களைத் தருகின்றன, மேலும் தேவபக்தியுள்ள குடும்பங்களையும் உருவாக்குகின்றன. தேவபக்தியுள்ள குடும்பங்கள் தேவபக்தியுள்ள குழந்தைகளை உருவாக்குகின்றன (மல்கியா 3:15), ஏனெனில் திருமணம் குழந்தைகளைப் பரிசுத்தப்படுத்துகிறது. தேவபக்தியுள்ள குடும்பங்கள் ஒரு சமூகம் வடிவமைக்கப்பட வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பு ஆகும். அதன் எதிர்காலம் அதையே பெரிதும் சார்ந்துள்ளது. தாவீதின் வம்சத்தில் இஸ்ரவேலின் மிகப் பெரிய ராஜாவைக் காண ரூத் வாழ்ந்திருக்கலாம், ஆனால் தனது மணமகளை மீட்டு தேவனுடைய ராஜ்யத்தை நிறுவ வந்த மிகப் பெரிய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அவள் அறிந்திருக்கமாட்டாள். தேவபக்தியை வெளிப்படுத்தும் விருப்பத்தேர்வால் என்ன சாதிக்க முடியும் என்பது பரலோகத்திற்கு மட்டுமே தெரியும். தேவபக்தியை வெளிப்படுத்தும் தீர்மானத்தால் துவங்கும் இந்தப் போக்குகளை நாம் குறிப்பிடுகையில், தேவபக்தியற்ற முடிவுகள் எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை உணர்ந்து அவற்றை

Free Digital Copy From ServeNow

ஈடுசெய்ய வேண்டும். யேசபேலை ஆகாப் மணந்தது அத்தகைய செயலுக்கு ஒரு உதாரணமாகும் (1 இராஜாக்கள் 21).

## சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ

தானியேலின் நண்பர்களான இந்த மூன்று நபர்களும் சிறைபிடிக்கப்பட்டு கைதிகளாக பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். நேபுகாத்நேச்சார் ராஜா அமைத்த பொற்சிலையை வணங்க மறுத்ததால் தேவனுக்காக அவர்கள் எடுத்த தீர்மானத்தில் அவர்களின் தேவபக்தியை சிறப்பாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த மூன்று நண்பர்களும் பொறாமை கொண்ட அரசாங்கத் தலைவர்களின் இலக்காக மாறினர். விரைவில் அவர்கள் தங்கள் எதிர்ப்பை நியாயப்படுத்த ராஜாவின் முன் நிற்க வேண்டியிருந்தது. ராஜாவே அச்சுறுத்தல்களை விடுத்தார், ஆனால் அவரது கட்டளைகளைப் பின்பற்றும்படி, அவர்களுக்கு பயத்தை ஏற்படுத்த முடியவில்லை. மாறாக, ஒரே மெய்யான தேவன் மீதான தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்த இது ஒரு பெரிய தளத்தை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தது.

*ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை நோக்கி: ராஜாவே, நீர் என்றும் வாழ்க. எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தையும் கேட்கிற எந்த மனுஷனும் தாழவிழுந்து, பொற்சிலையைப் பணிந்துகொள்ளவேண்டுமென்றும், எவனாகிலும் தாழ விழுந்து பணிந்துகொள்ளாமற்போனால், அவன் எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படவேண்டுமென்றும், ராஜாவாகிய நீர் கட்டளையிட்டீரே. பாபிலோன் மாகாணத்தின் காரியங்களை விசாரிக்கும்படி நீர் ஏற்படுத்தின சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் யூதரான மனுஷர் இருக்கிறார்களே; அவர்கள் ராஜாவாகிய உம்மை மதிக்கவில்லை; அவர்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும், நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ளாமலும் இருக்கிறார்கள் என்றார்கள்.*

*அப்பொழுது நேபுகாத்நேச்சார் உக்கிரகோபங்கொண்டு சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் அழைத்துக்கொண்டுவரும்படி கட்டளையிட்டான்; அவர்கள் அந்தப் புருஷரை ராஜாவின் சமுகத்தில் கொண்டுவந்துவிட்டபோது, நேபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனைசெய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ளாமலும் இருந்தது மெய்தானா?*

Free Digital Copy From ServeNow

*இப்போதும் எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தையும் நீங்கள் கேட்கும்போது, தாழ விழுந்து, நான் பண்ணிவைத்த சிலையைப் பணிந்துகொள்ள ஆயத்தமாயிருந்தால் நல்லது; பணிந்துகொள்ளாதிருந்தீர்களேயாகில், அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார் என்றான்.*

*சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி: நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவுசொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.* (தானியேல் 3:9-18).

வாழ்க்கையில் அக்கினி போன்ற சோதனைகளில் விசுவாசத்தின் மகிழ்ச்சியான கொண்டாட்டமாக தேவபக்தி இங்கே புரிந்துகொள்ளப்படுகிறது. அக்கினி ஜூவாலையில் தங்கம் அதன் எடையை ஓரளவு குறையச் செய்யலாம், ஆனால் அதன் மதிப்பு ஒருபோதும் குறையாது. உலோகம் எவ்வளவு தூய்மையாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு அதன் மதிப்பு அதிகமாகும்.

## தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ நான் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன?

## தேவனுடைய ஆள்தத்துவம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தேவன் விசேஷித்தவர் மற்றும் தமது சிருஷ்டிப்புகள் எல்லாவற்றிலிருந்தும் தனித்து நிற்கும் தேவனாக இருக்கிறார், இப்போது இயேசு கிறிஸ்து மூலம் மனிதர்களாகிய நமக்குத் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். நம்மால் தேவனை அறிய முடியும்.

*அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில்*

Free Digital Copy From ServeNow

*பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.* (1 தீமோத்தேயு 3:16).

## பங்கேற்பு

தேவனுடைய தெய்வீக சுபாவத்தில் பங்குகொள்ள நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இப்போது நம்மால் அவருடைய சுபாவத்தை வெளிப்படுத்த முடியும்.

*தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது.* (2 பேதுரு 1:3).

## பின்தொடர்தல்

தேவபக்தி என்பது பின்தொடரத் தகுந்த ஒரு குறிக்கோள். தேவனைப் பின்பற்றும் ஒரு நபர் தேவபக்தியைத் தொடர விரும்பினால், அவர் உலகத்தின் ஆசாபாசங்களில் சிக்கிக் கொள்ளக்கூடாது. அவர் செலுத்த வேண்டிய கிரயம் என்று ஒன்று உண்டு, ஆனால் அது விலையேறப்பெற்றது.

*பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

*நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.* (1 தீமோத்தேயு 6:10-11).

## ஜெபம்

தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கு சரியான சூழலைப் பெற நாம் ஜெபிக்க வேண்டும். தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ்வதன் நோக்கத்தைப் பெற்றிருப்பது, இயேசு கிறிஸ்துவின் மூலம் மற்றவர்களை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்த நமக்கு உதவுகிறது.

*ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள*

Free Digital Copy From ServeNow

*மனுஷர்களிடத்தில் ஒப்புவி. நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி. தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்.* (1 தீமோத்தேயு 2:1-4).

## தேவனுடைய வல்லமை

தேவபக்தி நம்மை தேவனுடைய வல்லமையைப் பெற்று, தேவனுக்குப் புகழ்ச்சியையும் மகிமையையும் விளைவிக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களைச் செய்ய வைக்கிறது. சாதாரண ஜனங்கள் அசாதாரணமான காரியங்களைச் செய்யப் பழகிவிடுகின்றனர்.

*பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன?* (அப்போஸ்தலர் 3:12).

## முன்னேற்றம்

தேவபக்தி என்பது கிறிஸ்தவ குணாதிசயத்தின் ஒரு அம்சம் மட்டுமே. ஆவிக்குரிய வளர்ச்சியின் செயல்பாட்டின் ஒரு பகுதியாக மற்ற அநேக பண்புகளும் உள்ளன, இவைகள் ஆவிக்குரிய முன்னேற்றத்தை வெளிப்படுத்துகின்றன.

*இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது.* (2 பேதுரு 1:5-8).

## வேஷம்

கடைசி நாட்களில் ஜனங்கள் தேவபக்தியாய் நடப்பதைப் போன்ற ஒருவித வேஷத்தைக் கொண்டிருப்பார்கள், ஆனால் அதின் பெலனை

Free Digital Copy From ServeNow

மறுதலிக்கிறவர்களாய் இருப்பார்கள். வேஷம் நம் விசுவாசத்திற்கு முரணானது. வல்லமையற்ற வாழ்க்கையை வாழாதீர்கள்.

*மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத்தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.* (2 தீமோத்தேயு 3:1-5).

## முடிவுரை

இவ்வுலக வாழ்க்கையிலும் இதற்குப் பிறகும் உள்ள வாழ்விலும் கூட தேவபக்தி பயனுள்ளதாக இருப்பதால், அது மிகவும் விலையேறப்பெற்றது.

*நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.* (1 தீமோத்தேயு 4:7-8).

தேவன் உங்களுக்காக வைத்திருப்பதைத் தவறவிடாதீர்கள். தேவபக்தியைப் பயிற்சி செய்து, அதனால் கிடைக்கும் நன்மைகளை அனுபவியுங்கள். அப்படிச் செய்யும்போது, உங்கள் வாழ்க்கை முன்புபோல அதே மாதிரியாக ஒருபோதும் இருக்காது. நீங்கள் செய்யும் சகல காரியங்களையும் திறம்பட செய்பவர்களாகவும் பலன்தர வல்லவர்களாகவும் இருப்பீர்கள். இறுதியில் உங்கள் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்கும். வாழ்க்கை என்பது வரலாற்றில் நேரத்தை செலவிடுவது மட்டுமல்ல, அது மற்றவர்களின் நித்திய விதியில் மாற்றத்தை ஏற்படுத்தும் மற்றும் தாக்கத்தை உண்டுபண்ணும்

Free Digital Copy From ServeNow

விஷயங்களுக்கும் கணிசமாக பங்களிக்கிறது. தெய்வபக்தியற்ற வாழ்க்கையை வாழ்ந்து வெற்றிகரமாக இருந்த மனிதனின் கதை உங்களுக்கு நினைவிருக்கிறதா? உங்கள் வாழ்க்கை அப்படி இல்லாமல் வித்தியாசமானதாக இருக்கலாம். நீங்களும் தேவனுடைய சத்தத்தைக் கேட்பீர்கள்!

*அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.* (மத்தேயு 25:21).

வித்தியாசமான நபராக இருப்பதன் மூலம் மற்றவர்களது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள்!

Free Digital Copy from ServeNow

**பாடத்தை கற்றுக்கொள்ளவும் பிரதிபலிக்கவும் சில கேள்விகள்**

1. வாழ்வின் உண்மையான நோக்கம் என்ன?
2. தெய்வபக்தி நிறைந்த வாழ்க்கையை நீ எவ்வாறு சிறப்பாக விவரிப்பாய்?
3. தெய்வபக்தி நிறைந்த வாழ்க்கையை வாழத் தேவையான உத்வேகத்தை நீ எங்கிருந்து பெற்றுக்கொள்வாய்?
4. தெய்வபக்தி நிறைந்த வாழ்க்கையை வாழ நீங்கள் பாடுபடவோ அல்லது யாருக்காவது உங்களை அர்ப்பணிக்கவும் வேண்டுமோ?
5. தெய்வபக்தி நிறைந்த வாழ்க்கை என்பது ஒரு இலக்கா அல்லது ஒரு பயணமோ?
6. தெய்வபக்தி நிறை வாழ்வு என்பது ஒரு சரியான வாழ்வா?
7. தெய்வபக்தி நிறைந்த மனிதன் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்குமோ?
8. தெய்வபக்தி நிறைந்த மனிதன்எவ்வாறு வெற்றிகரமான வாழ்க்கை வாழ முடியும்?
9. தேவபக்தி நிறைந்த வாழ்க்கை வாழ்வதன் பயன்கள் என்ன?
10. தேவபக்தி இல்லாத வாழ்வு வாழ்பவரை தேவன் எவ்வாறு கையாளுகிறார்?